**20.01.2026**

**அ.வ.எண். 119/2021**

**பி.சா.1– வெங்கடேசன், த/பெ.நடேசன்**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 20.01.2026 is accordance with the provision of Act X of 3331

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. வா.சா.ஆ.5 ஆவணத்தில், க.ச.எண்.265/1 பூமியில் 20 செண்ட் பூமியும், அதனுடன் வடக்கே அமைந்துள்ள கிணற்றில் 1/4 பாகமும், தெற்கே உள்ள கிணற்றில் 1/3 பாகமும், அந்த சொத்திற்கு சென்று வர வண்டி மற்றும் தடப்பாத்தியம் உள்ளது என்றும், கிரய ஆவண எண்.8390/2012 கண்டுள்ளது என்றால் சரியல்ல, கேள்வியில் வடக்கே என்று சொல்வது தவறானது. கேள்வியில் பாகமும் தவறாக உள்ளது. ஆவணத்தில் வண்டி மற்றும் தடபாத்தியமாக மாமூல் என குறிப்பிடப்பட்டுள்ளது. மூல ஆவணத்தில் இல்லாதது வா.சா.ஆ.5 ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 ஆவணம் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ.5 ஆவணத்தில், க.ச.எண்.265/1 பூமியில் மீதமுள்ள 30 செண்ட் பூமியானது என்னால் கிரயம் செய்யப்பட்டு, என்னுடைய அனுபவ சுவாதீனத்தில் உள்ளது என்றால் சரிதான். வாதிகளின் தாத்தாவான அருணாச்சல தேவருக்கு பாத்தியப்பட்ட பூமியை ஆவண எண்.1787/1956 ன் படி வாதிகள் எவ்வித இடையூறுமின்றி ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. வாதிகளின் தகப்பனார் வெங்கடாசலம், அவர் தந்தை அருணாச்சலம் இறப்பதற்கு முன்பாகவே காலமாகிவிட்டார் என்ற விவரம் எனக்குதெரியுமா என்றால் ஆவணத்தை பார்த்து தெரிந்து கொண்டேன். வாதிகளின் தாத்தா அருணாச்சல தேவர் அவரது மனைவியான பேச்சியம்மாளுக்கு 1992 ம் வருடம் உயில் ஆவணம் எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால் ஆவணத்தை பார்த்து தெரியும், வருடம் தெரியாது.

3. பேச்சியம்மாளுக்கு பின்னிட்டு, அச்சொத்து வாதிகளின்

சகோதரராகிய குமார் (எ) ராம்குமாருக்கு பாத்தியப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஆவணத்தை பார்த்து தெரியும். வாதிகளின் சகோதரராகிய குமார் (எ) ராம்குமார் திருமணம் ஆகாமல் இறந்ததால் வாதிகளுக்கு தாவா சொத்து பாத்தியப்பட்ட விவரம் தெரியுமா என்றால் ஆவணப்படி அவரது சொத்து அவரது தாயாருக்கு பாத்தியப்பட்டது என தெரியும். எந்த ஆவணத்தின் படி தெரியும் என்றால் வழக்கில் வாதி கொடுத்த ஆவணங்களை பார்த்து தெரியும். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. எனக்கு பாத்தியப்பட்ட பூமியும், வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமியும் பக்கம், பக்கம்மாக அமைந்துள்ளது என்றால் மாமூல் வழித்தடத்திற்கு தெற்கு எனது பூமியும், மேற்படி தடத்திற்கு வடக்கே வாதிகளின் பூமியும் உள்ளது. வாதிகளின் பூமி, என்னுடைய பூமிக்கும், 2ம் பிரதிவாதியின் பூமிக்கும், நேர்ப்பின்னால் அமைந்துள்ளது என்றால் பின்னால் என்பது தவறு, மாமூல் வழித்தடத்திற்கு தெற்கே எனது பூமியும், வடக்கே வாதியின் பூமியும் அமைந்துள்ளது. என்னுடைய கிரய ஆவணத்திலும், 2ம் பிரதிவாதியின் கிரய ஆவணத்திலும், மற்றும் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட ஆவணத்திலும், தாவா பூமிக்கு செல்ல ஒரே பொது வழி உள்ளது என்றால் தாவா சொத்திற்கு செல்ல மூன்று வழிகள் உள்ளது.

5. 1990 ம் ஆண்டு மேல்வாய்க்கால் பாசனம் இருந்தது என்றால் மேல்வாய்க்கால் என்பது என்னவென்று தெரியவில்லை. மேற்படி வாய்க்கால் மூலமாக அருகில் இருந்த நொய்யல் ஆற்றில் இருந்து வழியாக பாசனம் ஏற்படுத்தப்பட்டது என்றால் என்ன வாய்க்கால் என்று தெரியவில்லை. கிணற்று பாசனம் முதலில் காளை மாடுகளை வைத்து தண்ணீர் இறைக்கப்பட்டும், பின்னிட்டு மின்சாரம் மூலமாக பாசனம் செய்யப்படும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பின்னிட்டு நீர் மூழ்கி மோட்டார் பயன்பாட்டிற்கு வந்த பின்னிட்டு மேல்வாய்க்கால் அழிக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் மேல்வாய்க்கால் என்பது என்ன என்று எனக்கு தெரியாது.

6. ஜோசப் வாங்கிய பூமி, சுந்தர் அய்யர் அவருடைய பூமிக்கு வடக்கே அமைந்துள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் சுந்தர் அய்யர் என்பவரை எனக்கு தெரியாது. நான் ஜோசப்புக்கு கிரயம் கொடுத்த பூமியில் கிழமேல் வாய்க்கால் இல்லை என்றால் சரிதான். நான் கந்தசாமியிடம் இருந்து வாங்கிய பூமிக்கு தென்புறத்தில், சடையப்பன் பூமி உள்ளது என்றும், அதை தற்போது ஜோசப் வாங்கியுள்ளார் என்றால் அது தவறு. என்னுடைய பூமிக்கு தெற்கில் வாதிக்கு பாத்தியப்பட்ட பூமியும், சின்னிய கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூமியும் உள்ளது என்றால் அது தவறு. என்னுடைய பூமிக்கு தெற்கில் சுமார் 20 அடி உயரமுள்ள ஏரிக்கரை உள்ளது. என்னுடைய பூமிக்கு வடபுறம் மாமூல் வழித்தடம் இல்லை என்றும், வாதி மற்றும் சின்னிய கவுண்டர் பூமி மட்டுமே உள்ளது என்றால் சின்னிய கவுண்டர் பூமி அங்கு இல்லை, என்னுடைய பூமிக்கும், வாதியின் பூமிக்கும் இடையே மாமூல் வழித்தடம் உள்ளது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. தாவா சொத்தில் வடபுறம் கிணறு எப்போது வெட்டப்பட்டது என்றால் தெரியாது. கிணற்றில் பாகம் உள்ளது. தாவா சொத்தில் கிணறு இல்லை. க.ச.எண்.265/1 காலைக்கு மாமூல் வாய்க்கால் வழித்தடத்தை ஒட்டி உள்ளது. வடபுறம் உள்ள கிணற்றில் ஊற்று இல்லாத காரணத்தால் பயன்பாட்டில் இல்லை என்றால் அது தவறு. அங்கு டீசல் பம்ப் செட் மூலம் பாசனம் செய்ததாக எனக்கு கிரயம் கொடுத்தவர் சொன்னார், பம்ப் செட் திருடு போகி, மின் இணைப்பு இல்லாததால் பயன்பாடு செய்ய முடியாமல் உள்ளது. தண்ணீர் ஊற்று உள்ளது. வடபுறம் உள்ள கிணற்றில் ஊற்று இல்லாததால் தென்புறமாக கிணறு வெட்டப்பட்டது என்றால் அது தவறு. வடபுறம் உள்ள கிணற்றில் மின்சார இணைப்பு இல்லை. நான் சொல்வது போல் வடபுற கிணற்றில் மின் இணைப்பு என்றால் சரியல்ல.

8. தாவா சொத்தில் புலப்படம் குறித்து தெரியுமா என்றால் க.ச.எண்.265/1 க்கான மொத்த புலப்படம் தெரியும். பொதுவாக கிணறு வெட்டும்போது அவரவர் பாகத்திற்குண்டான செலவுகளை அவரவர்கள் செய்து கொள்வார்கள் என்றால் தெரியாது. மேல்வாய்க்கால் பாசனம் மூலம் தெற்கில் உள்ள தண்ணீர் வடக்கு நோக்கி பாயும்படியாக வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது என்றால் மேல்வாய்க்கால் பாசனம் என்ன என்று தெரியவில்லை. வடக்கில் இருந்து தெற்கு

நோக்கி தண்ணீரை பாய்ச்ச முடியாததால் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி தண்ணீர் பாயும் படி வாய்க்கால் அமைக்கப்பட்டது என்றால் சரியல்ல, வடக்கில் இருந்து எனக்கு தண்ணீர் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. 2020 ம் ஆண்டில் பாசனத்திற்காக பைப் அமைக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பைப் மூலமாக கிணற்றில் இருந்து வாய்க்கால் மூலம் பூமிக்கு வரும் தண்ணீர் காலதாமதமாக வரும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் பைப் மூலமாக வேகமாக நீர் வரும், வாய்க்கால் மூலமாக தாமதமாக வரும்.

9. களிமண் நீரை உறிஞ்சாது என்றால் நீரை உறியும், ஆனால் குறைவாக உறியும். வாய்க்கால் மூலமாக தண்ணீர் பாய்ச்சும்போது பராமரிப்பு செலவு அதிகாமாகும் என்பதால் நான் பைப் அமைத்தேன் என்றால் மடை மாற்றும் வேலை இல்லாமல் நேரடியாக வால்வு மூலமாக தண்ணீர் வர வேண்டி பைப் அமைத்தேன். நான் மேற்கண்டவாறு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில், பைப் போட முடிவு செய்தபோது, 2ம் பிரதிவாதி தோட்டத்திற்கு வடகிழக்கில், 1 பாயிண்ட்டும், வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமியில் மத்தியில் மற்றும் வடகிழக்கில், 2 பாயிண்ட்டுகள் அமைக்க நானும், வாதி மற்றும் 2ம் பிரதிவாதியும் ஒப்புகொண்டோம் என்றால் இல்லை.

10. 6 மாதம் கழித்து, 2ம் பிரதிவாதி வடகிழக்கில் பைப் அமைத்து தண்ணீர் பாய்ச்சினார் என்ற விவரம் தெரியுமா என்றால் உட்பிரிவு ஏற்படவில்லை, பொது வாய்க்கால் அழிக்கப்பட்டதால் பைப் லைன் அமைத்து அதிலிருந்து வாதிக்கு தண்ணீர் விடப்பட்டது. நான் JCB இயந்திரம் மூலம் வழித்தடத்தையும், வாய்க்கால் வசதிகளையும், அழித்து வாதிகளின் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் வழித்தடத்தை அளிக்கவில்லை, புகார் கொடுத்தேன். வாதிகள் இல்லாத சமயத்தை பயன்படுத்தி தாவா சொத்தில் கம்பிவேலி அமைத்தேன் என்றால் தவறு. அவ்வாறு கம்பிவேலி அமைத்ததால் தான் வாதிகள் என் மீது சூலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர் என்றால் தவறு. நான் கொடுத்த புகாருக்கு பதில் புகார் கொடுத்தனர்.

11. அதற்காக காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்தார்களா என்றால் இருவரையும் அழைத்து விசாரித்தனர். நான் பைப் போட்ட பின்னர் வாதிகளின் வாய்க்கால்களையும், தடத்தையும் அழித்து, கம்பிவேலியிட்டு வாதிகளின் உரிமையை மறைத்துள்ளேன் என்றால் வாதிகளின் வாய்க்கால் தடத்தை நான் அழிக்கவில்லை. நான் கிழமேல் பைப் போட்டு வழித்தடத்தை அழித்ததால் தற்போது 2 அடி மட்டுமே வழித்தடம் உள்ளது என்றால் நான் வழித்தடத்தை அழிக்கவில்லை. 2006 க்கு முன்னிட்டு குளக்கரையானது சுமார் 6 – 8 அடி உயரமாக இருந்தது என்றால் தெரியாது. மீன்பிடி தொழில் செய்வதற்காக குளக்கரையானது பயன்படுத்தப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

12. பொது தடத்தின் மீது மின் இணைப்பு செல்லவில்லை என்றால் மாமூல் வழித்தடத்தின் மீது மின் இணைப்பு எதுவும் செல்லவில்லை. மாமூல் தடத்தில் இருந்து 15 அடி தள்ளி மின் இணைப்பு செல்கிறது என்றால் கிணற்றை ஒட்டி கிழமேலாக மின் இணைப்பு செல்கிறது. வாதிகளுக்கு அவர்களது பூமிக்கு செல்ல உள்ள தடப்பாத்தியம் உள்ளது என்றும், வாரி வாய்க்கால் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் அது அனைவருக்கும் பொதுவான தடம் ஆகும், வாரி வாய்க்காலும் பொதுவானது. எனக்கும், 2 ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட பூமிகளுக்கு எந்த தொடர்பும் இல்லாத தாவா பூமியில் வாதிகளுக்கு உள்ள உரிமையை மறுத்து வேறு ஒரு வழி பயன்படுத்தி கொள்ளுமாறு நான் கம்பிவேலியிட்டு வாதிகளின் உரிமையை தடுத்துள்ளேன் என்றால் மாமூல் வழித்தடத்தை நான் தடுக்கவில்லை.

13. தாவா சொத்திற்கு செல்லும் வழியை, கம்பிவேலியிட்டு வாதி பயன்படுத்தி வருவதை தடுக்கிறேன் என்றால் இல்லை. தாவா சொத்தில் உள்ள வழித்தடத்தையும், கிணற்றையும், வாய்க்கால் வசதிகளையும், வாதிகளை பயன்படுத்த விடாமல் கம்பிவேலியிட்டு தடுத்துள்ளதால் கம்பிவேலியை அகற்ற நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வழித்தடத்தை உபயோகிக்கவும், இடையூறு ஏற்படுத்தக்கூடாது எனவும், அந்த பொதுகிணறு மற்றும் பொது வழித்தடத்தையும் பயன்படுத்த குந்தகத்தை நான் ஏற்படுத்தக்கூடாது எனவும், வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் படி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur